*கவனிக்க.*-2022.05.06 ஆந் திகதிய 2279 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2280 - 2022 මැයි මස 13 වැනි සිකුරාදා - 2022.05.13

*2280 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 784 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 787 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 782 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**-(i) *சிறுநீரக மற்றும் நீரிழிவு சிங்க வைத்தியசாலை அறக்கட்டளை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2022, ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதிகளை முழுஜமயான நன்றியீனம் என்னும் ஏதுவின் மீது கைமீட்டல் (திருத்தம்) சட்டமூலம் 2022, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(iii) *விருப்பாவணங்கள் (திருத்தம்) சட்டமூலம் 2022, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, யூன் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, மே மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


781 - B 082344 - 5,403 (2022/05)

# ஆய விற்பனையும் குத்தகையும்

## முந்தல் பிரதேச செயலாளர் பிரிவு

*கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை -2022/2023*

*2022, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2023, யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியினுள் கீழ் வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளில் 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளாவாறான கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் மற்றும் சகல கலால் அனுமதிப்பத்திரங்களுக்கமைவான நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையிலும் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான குத்தகை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2 முந்தல் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய விண்ணப்பப்படிவங்களில் கேள்விகளை சமர்ப்பிக்கப்படுவதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புத் தொகைப் பணத்தை முந்தல் பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் 15 % பெறுமதியான ஆதன பெறுமதிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.*

*3. கேள்விப் பத்திரங்களை முறையாக முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் கள்ளுத் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு ".............................. இலக்கமுள்ள ........................ கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிக்கப்படல் வேண்டும். கள்ளுத்தவறணைக்கான கேள்விப்பத்திரங்கள் 2022.06.03 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக முந்தல் பிரதேச செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் முந்தல் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.*

*4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.*

*5. 2022.06.30 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் முந்தல் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.*

*6. முன்னர் குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய முடியாது போன கள்ளுத் தவறணைகள் 2022.07.04 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அத்தினத்திற்கு கேள்விப்பத்திரங்கள் முன்வைத்தல் முன்னர் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க நடைபெறும்.*

*7. இது தொடர்பான மேலதிக விபரங்களை முந்தல் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 032-2052271.*

*டீ.எம்.றொகான் பிரியன்த தசநாயக,*
*பிரதேச செயலாளர்,*
*முந்தல்.*

*பிரதேச செயலகம்,*
*முந்தல்,*
*2022. 05.04.*

**அட்டவணை**

| தொ. இல. | பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|---|---|
| 1. | முந்தல் | முந்தல் | மு.ப. 11.00 மணி | பி.ப.2.00 மணி இரவு 8.00 மணி | மு.ப.10.30 மணி 2022.06.03 | ரூ.1,000.00 |

| தொ. இல. | பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|---|---|
| | | | பி.ப.5.00 மணி | | | |
| 2. | முந்தல் | மதுரங்குளி | மு.ப. 11.00 மணி | பி.ப.2.00 மணி | மு.ப.10.30 மணி 2022.06.03 | ரூ.1,000.00 |
| | | | பி.ப.5.00 மணி | இரவு 8.00 மணி | | |
| 3. | முந்தல் | முக்கு தொடுவாவ | மு.ப. 11.00 மணி | பி.ப.2.00 மணி | மு.ப.10.30 மணி 2022.06.03 | ரூ.1,000.00 |
| | | | பி.ப.5.00 மணி | இரவு 8.00 மணி | | |
| 4. | முந்தல் | உடப்பு | மு.ப. 11.00 மணி | பி.ப.2.00 மணி | மு.ப.10.30 மணி 2022.06.03 | ரூ.1,000.00 |
| | | | பி.ப.5.00 | இரவு 8.00 மணி | | |

05- 107

---

**மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேச செயலகப் பிரிவில்**
**வாகரை கள்ளுத் தவறணைக்கான மீள் குத்தகை விற்பனை**
***2022, யூலை - 2023 யூன்***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 1982ஆம் வருட கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேசத்திற்குட்பட்ட வாகரைக் கள்ளுத்தவறணைக்கான கேள்வி 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2023, யூன் மாதம் 30ஆந் திகதி வரையுள்ள கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் ஆயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 1,500 ) பணத்தை கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டினைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். இக்கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2022.05.17ஆந் திகதி முதல் 2022.05.31ஆந் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதிச் சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15%ற்குக் குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதிச் சான்றிதழ் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. பிழையாக பூரணப்படுத்தப்படும் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை மீளப் பெற விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப் பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பி சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

6. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு

மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். ( நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012.01.05 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)

7. ஏனைய விபரங்கள் கோரளைப் பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஜீ. அருணன்,
பிரதேச செயலாளர்,
கோரளைப்பற்று வடக்கு,
வாகரை.

பிரதேச செயலகம்,
கோரளைப்பற்று வடக்கு.
வாகரை,
2022.05.13.

**அட்டவணை**

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| பால் சேனை கிராம அலுவலர் பிரிவு | TT No. 5 | 2022.06.01 | பி.ப. 2.00 மணி |

**குறிப்பு**.- 1. கேள்விச் சபை 2022.06.01 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்குக் கூடும்.
2. விற்பனைத் தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு விற்பனை 2022.05.08 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு நடைபெறும்.
3. தெரிவு செய்யப்படும் குத்தகைக்காரர் மீள் குத்தகை விற்பனை இடம்பெற்ற அதே தினத்தில் அலுவலக நேரத்தினுள் பாதுகாப்பு வைப்புத் தொகையை பிரதேச செயலகத்தில் செலுத்த வேண்டும்.

05- 76

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## வெகிக்கிள் லவேர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் கம்பனியின் பதிவு இல. PV 14437

கலைப்பாளர் விடுவிப்புஅறிவித்தல்
2007 ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்ட (பிரிவு 162(2))

*கம்பனியின் பெயர்:* வெகிக்கிள் லவேர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.310A , ஹைலெவல் வீதி, கொழும்பு 06
*நீதிமன்றம்* : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு ( குடியியல்)
*வழக்கு இல.:* HC (civil)/ 23/2011/CO
*கம்பனி கலைப்பாளர் பெயர்:* P.E.A. Jayewickreme
*முகவரி:* Level 4, No.2, (Presently at Level 3, No.11) Castle Lane, Colombo-04
*கலைப்பாளர் விடுவிப்பு திகதி:* 2022.03.31

நான் 2021, நவெம்பர் 26 ஆந் திகதியன்று, கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றத்தின் கலைப்பாளர் நியமனத்திலிருந்து விடுவிக்கப்பட்டேன் என்றும், அதன் மூலம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தின் கூட்டுக்கலைப்பாளர் நியமனத்திலிருந்து 2022, மாச்சு 31 ஆந் திகதியன்று விடுவிக்கப் பட்டேன் என்றும் இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

P. E. A. Jayewickreme,
Liquidator.

2022, May 5.

05- 97

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கம்பஹா மாவட்டம், வேபட, வேபட வடக்கு, இல. 606/எப், என்ற முகவரியில் வசிக்கும் பொல்பிடி ஆஷாரிகே விஜித தம்மிக வர்ணசிறி ( தே.அ.அ.இல. 793392826V) ஆகிய நான், டோஹா கடாரிலுள்ள இலங்கை தூதுவராலயத்தில் கையொப்பமிடப்பட்டு என்னால் கம்பஹா மாவட்டம், வேபட, வேபட வடக்கு, இல. 606/எப் என்ற முகவரியில் வசிக்கும் பொல்பிடி ஆஷாரிகே

தமரா ஜயசீலி ( தே.அ.அ.இல. 196868000814) என்பவருக்கு வழங்கப்பட்ட 2020.02.20 ஆந் திகதியிடப்பட்ட 2998 ஆம் இலக்கம் கொண்ட அதிகாரமளிக்கும் அற்றோணித் தத்துவத்தை இன்று முதல் இரத்துச் செய்து வலிதற்றதாக்கிவிட்டேன் என இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் அறிவிக்கின்றேன்.

அதன் படி, அற்றோணித் தத்துவம் உடன் அமுலுக்கு வரும் வகையில் சட்டரீதியாக செல்லுபடியற்றதாகும் என மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொல்பிடி ஆஷாரிகே விஜித தம்மிக
வர்ணசிறி .

05- 79

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாலபே, சுசீலாராம வீதி, டானியல் அமரசிங்க மாவத்தை, இலக்கம் 488/ A/ 2 என்னும் முகவரியில் வசிக்கும் மோதக சஞ்சீவக குணதாச ( தேசிய அடையாள அட்டை இலக்கம் 742040402V) மாலபே, கஹன்தொட்ட வீதி, பக்மீகஹ வீதி, இலக்கம் 257D என்னும் முகவரியில் வசிக்கும் ரோஷினி நிலுபமா விமலரத்ன ( தேசிய அடையாள அட்டை இலக்கம் 78541070V) ஆகிய நாங்கள் பொதுமக்களுக்கு அறியத்தருவது என்னவெனில், 2009.10.07 ஆந் திகதியன்று பத்தரமுல்ல பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்டு பதியப்பட்ட இல. 23, இருமடி 27, பதிவு இலக்கம் 7707, 2009.11.04 ஆந் திகதியிடப்பட்ட இலந்தரி தேவகே விமலரத்ன ( தேசிய அடையாள அட்டை இலக்கம் 510551915V) A5/G2, மனிங் டவுன் வீட்டுத் திட்டம், கொழும்பு 08 என்ற முகவரியிலுள்ள இவருக்கு அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்து மீளப் பெறுகிறோம் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து எங்கள் சார்பில் அற்றோணித் தத்துவகாரரான இலந்தரி தேவகே விமலரத்ன மேற்கொள்ளும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நாங்கள் பொறுப்புச் சொல்ல மாட்டோம் என்பதையும் அறியத்தருகின்றோம்.

மோதக சஞ்சீவக குணதாச.
ரோஷினி நிலுபமா விமலரத்ன.

05- 82/1

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாலபே, சுசீலாராம வீதி, டானியல் அமரசிங்க மாவத்தை, இலக்கம் 488/ A/ 2 என்னும் முகவரியில் வசிக்கும் மோதக சஞ்சீவக குணதாச (தேசிய அடையாள அட்டை இலக்கம் 742040402V) மாலபே, கஹன்தொட்ட வீதி, பக்மீகஹ வீதி, இலக்கம் 257D என்னும் முகவரியில் வசிக்கும் ரோஷினி நிலுபமா விமலரத்ன ( தேசிய அடையாள அட்டை இலக்கம் 785481070V) ஆகிய நாங்கள் பொதுமக்களுக்கு அறியத்தருவது என்னவெனில், கொழும்பு 08, மனிங் டவுன் வீட்டுத் திட்டம், A5/ G2 என்னும் முகவரியில் வசிக்கும் இலந்தரி தேவகே விமலரத்ன ( தேசிய அடையாள அட்டை இலக்கம் 510551915V) பிரசித்த நொத்தாரிசு திரு. எம். எஸ். எம். அம்ஹர் அவர்களினால் 31 ஆம் இலக்கத்தின் கீழ் 2015.06.23 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டு கொழும்பு பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் பதிவு செய்யும் அதிகாரியின் தொகுதி 06, இருமடி 37 மற்றும் பதிவு இலக்கம் 2047 அத்துடன் 2015.06.30 ஆந் திகதியன்று பதிவு செய்யப்பட்டுள்ளதுமான விசேட அற்றோணித் தத்துவத்தை நீக்கியுள்ளதாகவும், மீளப் பெற்றுள்ளதாகவும் இலங்கை மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றோம்.

இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து எங்கள் சார்பில் அற்றோணித் தத்துவகாரரான இலந்தரி தேவகே விமலரத்ன மேற்கொள்ளும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நாங்கள் பொறுப்புச் சொல்ல மாட்டோம் என்பதையும் அறியத்தருகின்றோம்.

மோதக சஞ்சீவக குணதாச.
ரோஷினி நிலுபமா விமலரத்ன.

05- 82/2

---

## அற்றோணி அதிகாரத்தை மீளப் பெறுதல்

பொரலஸ்கமுவ, இல. 189/6, பிரிவேனா வீதியைச் சேர்ந்த துனுவில முதியன்சேலாகே சமிந்த சஹான் சமரவீர, தே.அ.அ. இல. 692411323V ஆகிய நான் இலங்கை அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிப்பதாவது உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பொது அற்றோணித் தத்துவம் இலக்கம் 10098, 2014.01.11 , 11 ஆந் திகதி இடப்பட்டு டக்லஸ் சிரிவர்தன நொத்தாரிசு அவர்களால் வழங்கப்பட்ட துனுவில முதியன்சாலகே ருவான் ரன்தேனிய சமரவீர தே.அ.அ.இல. 752971501V, இலக்கம் 189/6 , பிரிவேனா வீதி, பொரலஸ்கமுவ உடனடியாக இரத்துச் செய்யப்படுகிறது எனவும் இதன் பிறகு துனுவில முதியன்சாலகே ருவான் ரன்தேனிய சமரவீர என்பவரால் செய்யப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நான் பொறுப்பு அல்ல என்பதையும் இத்தால் அறிவிக்கின்றேன்.

துனுவில முதியன்சேலாகே சமிந்த
சஹான் சமரவீர.

05-91

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி பூர்னவத்த, பூர்ன ஒழுங்கை, இல. 08 ஐச் சேர்ந்த ரஞ்சித் பெரேரா ( தே.அ.அ.இல. 196205210015) ஆகிய நான், எனது அற்றோணிதாரராக கண்டி, தர்மசேன வீதி, இல. 22A ஐச் சேர்ந்த ஆனந்த பெரேரா ( தே.அ.அ.இல. 650691911V) ஐ நியமித்து கண்டி பகிரங்க நொத்தாரிசு M.s. ஜீவ. டி பிரசங்கனீ பியதிலக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018, ஒகத்து 21 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணித் தத்துவ இல. 2820 ஐ நான் இரத்துச் செய்து செயலிழக்கச் செய்வதாக இலங்கை குடியரசுக்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

05- 60

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தற்போது கம்பஹா, கொழும்பு வீதி, 182 ஆம் இலக்கத்தில் வசிப்பவரும் Australia, Victoria, Melbourne, Glenory 3046, Tarana Avenue, 48 ஆம் இலக்கத்தில் வசிப்பவரும் 685572338V என்ற தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தின் உரிமையாளருமாகிய மதுரப்பெரும ஆராச்சிகே வத்சலா ஜானகி ஜயவர்தன ஆகிய நான், எழுத்து மூலம் அதிகாரம் பெற்றவர்களின் பதிவகத்தின் 39 ஆம் பாகம், 73 ஆம் பக்கத்தில் 8140 என்ற இலக்கத்தையுடைய நாட்புத்தகத்தில் 2010.10.12ஆந் திகதியன்று பதிவு செய்யப்பட்டதும் கம்பஹா பிரசித்தநொத்தாரிசு ஆர்.எம்.என்.டபிள்யூ.ராஜகருணாவினால் 2010, ஒற்றோபர் 05 ஆந் திகதியிடப்பட்டதும் 27257 என்ற இலக்கத்தையுடையதும் இலங்கை குடியரசின் கம்பஹா, கொழும்பு வீதி, 182/ 1 என்ற இலக்கத்தில் வசிப்பவருமாகிய மதுரப்பெரும ஆராச்சிகே சாமில ஜயவர்தன என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்து இல்லாதொழித்துள்ளேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுவதுடன் குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து மேற்கூறப்பட்டுள்ள மதுரப்பெரும ஆராச்சிகே சாமில ஜயவர்தன என்பவரினால் மேற்கொள்ளப்படும் எவ்வித செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

மதுரப்பெரும ஆராச்சிகே வத்சலா
ஜானகி ஜயவர்தன.

2022.05.04.

05- 96

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பன்னிப்பிட்டிய, ஹோகந்தர வீதி, இலக்கம் 1490/ 09 இல் வசிக்கும் ருக்ஷான் தர்ஷண இலேபெரும ஆகிய நான், என்னால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விசேட ( வெளிநாட்டு) அற்றோணிப்பத்திரத்தின் மூலம் பன்னிப்பிட்டிய, ஹோக்கந்தர வீதி, இலக்கம் 1490/09 என்ற முகவரியில் வசிக்கும் கொல்வின் நந்தசிறி இலேபெரும என்பவருக்கு அத்தாட்சிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட விசேட அற்றோணித் தத்துவமானது 2022.04.25 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெறும் வண்ணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதெனவும் இதன் பின்னர் அற்றோணி பெறுநரினால் மேற்கொள்ளப்படும் எந்தவித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்புதாரியல்ல எனவும் இலங்கை குடியரசின் பொதுமக்கள் அனைவருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

ருக்ஷான் தர்ஷண இலேபெரும.

05- 105

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 87/ 4, 2 ஆவது மாளிகாகந்த வீதி, கொழும்பு 10 இல் இருந்த நான், நம்முனி கங்கணம்கே சமித விராஜ் (தே.அ.அ.இல. 810991615V) திருமதி புஷ்பா டி. காகொட ஆராச்சி, நோட்டரி பப்ளிக் அவர்களால் உருவாக்கப்பட்ட விசேட சட்டப் பத்திரத்தை இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கின்றேன். 105, ஆனந்த மாவத்தை, கொழும்பு 10 இல் பதிவாளர் நாயகம் அலுவலகத்தின் மேல் மாகாண வலய அலுவலகத்தில் 2015.08.07 ஆந் திகதியன்று பதிவு செய்யப்பட்ட நாளிதழ் இலக்கம் 2559, ஃபோலியோ இலக்கம் 59 மற்றும் தொகுதி இலக்கம் 07 இல் பதிவு செய்யப்பட்டு, நம்புனி கங்கணங்கே மல்கவுக்கு வழங்கப்பட்டது (தே. அ. அ. இல. 896681818V) இல. 87/4, 2 ஆவது மாளிகாகந்த வீதி, கொழும்பு 10, 2022.05.04 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது மேலும் இனிமேல் எனது பவர் ஆஃப் அற்றோணியாக அவர் செய்த எந்தவொரு செயலுக்கும் அல்லது செயலுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

நம்முனி கங்கணம்கே சமித விராஜ் .

2022, மே 04.

05- 106

---

### வழக்கறிஞர் அதிகாரத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1001, கடவத வீதி, ராகம இடத்தில் குடியிருக்கும் அந்த இடத்தில் வசிக்கும் மிரந்த மாகினாகே நிலுஷி நதிஷானி சில்வா ஆகிய நான், 2017, மே மாதம் 02 ஆந் திகதி கம்பஹா பொது நோட்டரி சுரங்கா மெண்டிஸ் அவர்களால் எழுதி சான்றளிக்கப்பட்ட இல. 3267 என்ற விசேட வழக்கறிஞர் அதிகாரப் பத்திரத்தை இல. 75, கனே வீதி, ராகம இடத்தில் வசிக்கும் வெலசரகே ரீடா ரஞ்சனி பிரனாந்து அவர்களுக்கு வழங்கப்பட்ட வழக்கறிஞர் அதிகாரப் பத்திரத்தை 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம்

*11 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*எம்.எம்.நிலுஷி நதிஷானி சில்வா.*

*05- 108*

---

**செலான் வங்கி பீ.எல்.சீ.**
**கம்பனி பதிவு இலக்கம் PQ 9**
**செலான் டவர்ஸ், 90, காலி வீதி, கொழும்பு 03.**
**அறிவித்தல்**
**அற்றோணி அதிகாரத்தை திரும்பப் பெறல்**

*செலான் வங்கி பீஎல்சீ யின் பணிப்பாளர் சபை (வங்கி), கொழும்பு பிரசித்த நொத்தாரிசு T. P. கருணாசேகரவால் உறுதிப்படுத்தப்பட்ட 2020, மாச்சு 06 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 2071 ஐ உடைய விசேட அற்றோணி அதிகாரம் 2022, பெப்புருவரி 17 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டு நீக்கப்பட்டு மற்றும் செல்லுபடியற்றதாக்கப்பட்டது என பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் தருகிறது.*

*செலான் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*கம்பனிச் செயலாளர்.*

*05- 117*

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

*சிறில் மாவத்தை, மஹவஸ்கடுவ, வஸ்கடுவயில் வதிந்த தற்பொழுது VIA Marcantonio DUCCO, 422123, Brescia, இத்தாலியில் வதியும் சுவர்ணா ரேணுகா த சில்வா முனசிங்க ஆகிய நான், களுத்துறை பிரசித்த நொத்தாரிசு பியதாச ஹேவாலங்காரவினால் இல. 105, சிறில் மாவத்தை, மஹ வஸ்கடுவ, வஸ்கடுவ என்ற முகவரியைச் சேர்ந்த பிரஷாந்த த சில்வா முனசிங்க என்பவருக்கு வழங்கப்பட்ட இல. 1473 கொண்ட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்வதாக இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*மேற்சொல்லப்பட்ட பிரஷாந்த த சில்வா முனசிங்கவினால் அற்றோணி அதிகாரம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நான் பொறுப்பு கூறமாட்டேன்.*

*சுவர்ணா ரேணுகா த சில்வா முனசிங்க,*
*அற்றோணி அதிகாரி.*

*05- 118*

---

## ஏல விற்பனைகள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

*கே.வீ. மஹிந்தசிறி*
*கணக்கு இலக்கம் : 0041 5000 2791*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.10.31ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2022.04.12ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2022.04.09ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே ஏழு இலட்சத்து இருபத்தி எட்டாயிரத்து நாற்பத்தி எட்டு ரூபா எண்பது சதம் (ரூபா 1,07,28,048.80) 2019, ஒற்றோபர் 08 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே இருபத்தி ஓராயிரத்து ஐந்நூற்று ஐந்து ரூபா எழுபது சதம் (ரூபா 1,00,21,505.70) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் ஆறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 337, 202, 886, 1335, 1543, 1959 மற்றும் 5060 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2022.06.08 ஆந் திகதி மு.ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.*

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

*1. சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், குக்குலு கோரளே மெத பத்துவின் கலவான பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் ஹங்கரங்கல கிராம அலுவலர் பிரிவின் கலவான கிராமத்தில் அமைந்த "கிலிலேண்ட் எஸ்டேட்டின் ஒரு பகுதி எனும் கலவான நிந்தகம" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. கே. எஸ். பமுனுசிங்ஹ என்பவரால்*

தயாரிக்கப்பட்ட 2005, திசெம்பர் 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 2005/ 226 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: பாதை (10 அடி அகலம்) உத்தரவுபெற்ற நில அளவையாளர் என். டி. எஸ். வீரக்கொடி என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 1183 எனும் வரைபடத்தின் லொட் 2 ; கிழக்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் என். டி. எஸ். வீரக்கொடி என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 1183 எனும் வரைபடத்தின் லொட் 2 மற்றும் இல. 1002 எனும் வரைபடத்தின் லொட் 2 ; தெற்கு : இல. 1002 எனும் வரைபடத்தின் லொட் 2 மற்றும் உப்பாலி நாவலகே மற்றும் ஏனையோருக்கு சொந்தமான இதே காணியின் எஞ்சிய பகுதி மற்றும் மேற்கு : உப்பாலி நாவலகே மற்றும் ஏனையோருக்கு சொந்தமான இதே காணியின் எஞ்சிய பகுதி மற்றும் பாதை (10 அடி), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு ஏக்கர் (2ஏ.0றூ.0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2005/ 226 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

வழி மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

இல. 1183 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 4 (10 அடி அகல வீதிக்கான ஒதுக்கம்)

கூறப்பட்ட லொட் 1 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

மேற்கூறப்பட்ட கலவான கிராமத்தில் அமைந்த "கிலிலேண்ட் எஸ்ட்டேட்டின் ஒரு பகுதி எனும் கலவான நிந்தகம" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் என். டி. எஸ். வீரக்கொடி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1982, பெப்புருவரி 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 1183 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன – வடக்கு : இதே காணியின் லொட் 4 மற்றும் 10 அடி அகல வீதிக்கான ஒதுக்கம் ; கிழக்கு : இதே காணியின் லொட் 2 ; தெற்கு : ஆட்டிகலவத்த எனும் இல. 1002 எனும் வரைபடத்தின் லொட் 1 மற்றும் மேற்கு : இதே காணியின் எஞ்சிய பகுதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு ஏக்கர்கள் (2ஏ.0றூ.0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1183 எனும் வரைபடத்திற்கு அமைவாக இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் P 14/ 07 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(இலக்கங்கள் 337, 202, 886, 1335 மற்றும் 1543 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

2. சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், குக்குலு கோரளே மெத பத்துவின் கலவான பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் ஹங்கரங்கல கிராம அலுவலர் பிரிவின் கலவான கிராமத்தில் அமைந்த "கிலிலேண்ட் எஸ்டேட்டின் (கலவான நிந்தகமவுடன் சம்பந்தப்பட்ட)" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. டபிள்யு. எஸ். கே. விக்னராஜா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014, மே 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 2014/ 458 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: டீ. கே. சுமத்திபால் உரிமம் கோரும் காணி மற்றும் வீடுகளிலிருந்து வரும் வீதி; கிழக்கு : வீடுகளுக்கான வீதி ; தெற்கு : வீடுகளுக்கான வீதி மற்றும் மேற்கு : வீதிக்கான ஒதுக்கம் மற்றும் டீ. கே. சுமத்திபால் உரிமம் கோரும் காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தி ஆறு பேர்ச் (0ஏ.0றூ.26பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2014/458 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 1 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

மேற்கூறப்பட்ட கலவான கிராமத்தில் அமைந்த "கிலிலேண்ட் எஸ்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். டபிள்யு. ரத்நாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1976, ஒற்றோபர் 16 ஆந் திகதியிடப்பட்ட இல. 1132A எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் F என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: இதே காணியின் லொட் G ; கிழக்கு: இதே காணியின் லொட் G ; தெற்கு : இதே காணியின் லொட் G மற்றும் மேற்கு : குக்குலேகம முதல் கலவான வரையான வீதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தி ஆறு பேர்ச் (0ஏ.0றூ.26பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1132A எனும் வரைபடத்திற்கு அமைவாக இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் P 30/101 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இலக்கங்கள் 1959 மற்றும் 5060 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

05- 72

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஆர்.ஆர். கிரிஷான்
கணக்கு இலக்கம் : 0217 5000 4587

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.06.27ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.08.30ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2019.08.20ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே தொண்ணூற்றி ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்து இருநூற்று நாற்பத்தி ஒன்பது ரூபா ஐம்பத்தி எட்டு சதம் (ரூபா 1,91,50,249.58) 2019, மே 27 ஆந் திகதி அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே எண்பத்தொரு இலட்சத்து நாற்பத்தி மூவாயிரத்து நூற்று தொண்ணூற்று நான்கு ரூபா தொண்ணூற்றி இரண்டு சதம் (ரூபா 1,81,43,194.92) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 5233 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2022.06.02 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேஉட கோரலேயின் வேஉடவில்லி ஹத்பத்துவையின் மாவத்தகம பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் பண்டாரகலவத்த, இல. 647, கிராம அலுவலர் பிரிவின் யட்டவில கிராமத்தில் அமைந்த யட்டவில, கண்டி வீதி, வரிமதிப்பீட்டு இல. 513 ஐ ஏற்ற "மினிப்பிட்டியவத்த எனும் கொய்லங்கெ வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டப்ளியூ. எம். ரீ. பண்டா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2000, யூலை 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 634 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 5 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இங்கமைந்த லொட் 6 (10 அடி அகல வீதி); கிழக்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் டப்ளியூ. எம். ரீ. பண்டா என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 625 எனும் வரைபடத்தின் லொட் 1 (வீதி) மற்றும் லொட் 2 (வீதி); தெற்கு : குருநாகல் முதல் கண்டி வரையான பிரதான வீதி மற்றும் மேற்கு: இங்கமைந்து லொட் 3 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பது தசம் ஒன்று சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 30.10பே.) கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 643 எனும் வரைபடத்திற்கு அமைவாக குருநாகல் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் H 104/27 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவு பெற்ற நில அளவையாளர் டப்ளியூ. எம். ரீ. பண்டா என்பவரால் தயாரிக்கப்பட்ட லொட் 1, 2 மற்றும் 3 இன் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

05-73

---

## மக்கள் வங்கி - சுன்னாகம் கிளை

காணி மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் அனைத்துடன் கூடிய மதிப்புமிக்க சொத்து ஏல விற்பனைக்கு

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 D ஆம் இலக்க பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

வரகு கலாசாரத்திற்கு ஏற்ப லச்சம் இரண்டு மற்றும் எட்டில் ஐந்து (2& 5/8 Lms.V.C. ) எனக் குறிப்பிடப்பட்ட அனுமதி பெற்ற நில அளவையாளர் மற்றும் மட்டமாக்குநர் எம். இராசையா என்பவரால் தயாரிக்கப்பட்டு 2010.06.07 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இலக்கம் 768 திட்டத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளபடி லொட் இலக்கம் 1 எனும் சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டு வரகு கலாசாரத்திற்கு ஏற்ப லச்சம் இரண்டு மற்றும் குளி பத்து (2Lms V.C. மற்றும் 10 Kls) எனக் குறிப்பிடப்பட்டுள்ள வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இலக்கம் J/188 கிராம அலுவலர் பிரிவு, உடுவில் பிரதேச செயலகம் பிரிவில், உடுவில் வலிகாமம் வடக்கு பிரிவில் இணுவிலில் அமைந்துள்ள "கொக்கிலிப்பாய்" என்று அழைக்கப்படும் ஆதனம்.

கிழக்கெல்லை: காங்கேசன்துறை வீதி மற்றும் சிவபதம் சிவகரனின் ஆதனம் மூலமாகவும்;
வடக்கெல்லை: ஒழுங்கை ( நான்கு கன அடி அகலம்) மூலமாகவும்;

மேற்கெல்லை: ஒழுங்கை மற்றும் இராசதுறையின் மனைவி உத்தரத்தின் ஆதனமும்;

தெற்கெல்லை:நடராசாவின் மனைவி தையல் நாயகின் சொத்து மற்றும் சிவபாதம் சிவகரனின் சொத்து, இந்த வழியாக உள்ள வடக்கு மற்றும் மேற்கு எல்லையிலுள்ள பிரத்தியேகப் பாதைகளின் முழுமையான பயன்பாட்டுடன் .

மக்கள் வங்கியினால் எமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்திற்கேற்ப 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை மு.ப. 10.30 மணிக்கு எம்மால் யா/ஸ்ரான்லி வீதி கிளை, இல.19, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

**தொடர்புடைய ஆதனத்திற்கான பிரவேசம்**.- மருதனார் மடச் சந்தியிலிருந்து கே. கே.எஸ். வீதி வழியாக யாழ்ப்பாணம் நோக்கி 1.2 கி.மீ. தூரம் சென்று கந்தசுவாமி கோவில் வீதி, சந்தி வழியாக மத்திய கல்லூரி சந்தி வரை செல்லவும். அங்கிருந்து மேலும் 100 மீற்றர் பயணம் செய்யுங்கள். தொடர்புபட்ட ஆதனம் வலது புறத்தில் அமையப்பெற்றுள்ளதுடன், கிழக்கு எல்லை முகப்பில் ஒரு வீதியும் மற்றும் மற்றொரு நடைபாதை வடக்கு எல்லையிலும் அமைந்துள்ளது.

***தீர்மான அறிவித்தல்களுக்காக***.- தீர்மானம் பற்றிய அறிவித்தல்களுக்கு 2019, நவெம்பர் மாதம் 15ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் "டெயிலி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை** .- ஏல விற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10%(பத்து சதவீதம்);
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனைவரி 1%(ஒரு சதவீதம்);
(3) விற்பனை விலையின் ஏலதாரர் தரகு 2 .5% (இரண்டரை சதவீதம்);
(4) விற்பனைச் செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்);
(5) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி;

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி பிராந்தியத் தலைமை அலுவலகம்- யாழ்ப்பாணம், இலக்கம் 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

மேற்படி 30 நாட்களுக்குள் பணம் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட 10% தொகை சட்ட நீக்கம் செய்து சொத்துக்களை திரும்பப் பெறவும் சொத்துக்களை விற்கவும் வங்கிக்கு உரிமை உள்ளது.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம்- யாழ்ப்பாணம், 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம், 0212 222 602.

முன்னறிவிப்பின்றி மேல் குறிப்பிட்ட ஏல விற்பனையை இரத்துச் செய்யவும் நிறுத்தவும் வங்கிக்கு உரிமை உண்டு.

டல்லஸ் கெலாட்,
அங்கீகாரம் பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 146/3,
கல்தேரா கார்டன்ஸ்,
கீழ் துட்டுகெமுனு தெரு, கொஹுவல.

தொ.பே.இல.: 011- 4367467, 011-4367111.

05- 126

---

**கார்கில்ஸ் வங்கி லிமிட்டட்**

*1990 ஆம் ஆண்டின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் 4 ஆம் இலக்க சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 09 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பொது ஏல விற்பனை**

1 ஆம் ஏல விற்பனை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், உடபலாத்த கங்க இஹல கோரளை, கங்க இஹல கோரளை பிரதேச செயலாளர் பிரிவு, பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மல்வத்தகம இல. 1063 கிராம அலுவலர் பிரிவு குருந்துவத்த என மாற்றப்பட்ட பெலப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள "குருடுதுவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி (அனுமதிபெற்ற நில அளவையாளர் பி. ஜி. மாலனி டீ சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014, யூன் 24 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1234 இல் துண்டு 1 மீளளிக்கப்பட்டது) அனுமதிபெற்ற நில அளவையாளர் பி. ஜி. எம். டீ சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2018, பெப்புருவரி 13 ஆந் திகதியிடப்பட்ட

நிலவரைபட இல. 1300 துண்டு 1 சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்ட காணி அங்கு காணப்படுகின்ற கட்டடங்கள், மணல், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் ஒரு ஏக்கர் ஒரு றூட் மற்றும் எட்டு தசம் ஏழு ஏழு பேர்ச் (1ஏ. 1றூ. 8.77பே.) (0.5283 ஹெக்டயார்) விஸ்தீரணத்தை நிலவரைபட இல. 1300 கொண்டுள்ளது.

அத்துடன் விதிமுறைகளுக்கமைய அதன் மேலாகவும் அதன் ஊடாகவும் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் பி. ஜி. எம். டீ சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்டு 2014.06.08 எனத் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1231 துண்டு 2 வீதி ஒதுக்கீட்டிற்காக உறுதி மற்றும் இல. 2148, 2009, திசெம்பர் 01 இல் டபிள்யூ. எம். யூ. என். கே. ரத்னாயக்கா என்பவரால் பதியப்பட்டு NP மற்றும் உறுதி மாற்றம் இல. 5647, 2014, யூன் 30 இல் எஸ். சரத்சந்திர NP யினால் பதியப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட துண்டு அனுமதி பெற்ற நிலஅளவையாளர் பி. ஜீ. டீ சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்டு 2018, பெப்புருவரி 13ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1300 துண்டு 1 மீளளவீட்டு விபரம் பின்வருமாறு :

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், உடபலாத்த கங்க இஹல கோரளை, கங்க இஹல கோரளை பிரதேச செயலாளர் பிரிவு, பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மல்வத்தகம இல. 1063 கிராம அலுவலர் பிரிவு குருந்துவத்த என மாற்றப்பட்ட பெலப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள “குருடுதுவத்த” என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் பி. ஜி. மாலனி டீ சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014, யூன் 24 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1234 இல் துண்டு 1 பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்ட காணி அங்கு காணப்படுகின்ற கட்டடங்கள், மணல், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் ஒரு ஏக்கர் ஒரு றூட் மற்றும் எட்டு தசம் ஏழு ஏழு பேர்ச் (1ஏ. 1றூ. 8.77பே.) (0.5283 ஹெக்டயார்)) விஸ்தீரணத்தை நிலவரைபட இல. 1300 கொண்டுள்ளதுடன் கம்பஹா காணிப் பதிவு அலுவலகத்தில் பரிமாணம்/தொகுதி G 38/130 இன் கீழ் பதியப்பட்டுள்ளது.

எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் 2022, யூன் 03 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**2 ஆம் ஏல விற்பனை**

| இல. | இயந்திரங்கள்/ உபகரணங்கள் | பருமன் | அளவு | R.P.M. | M.H.P. | வரிசை | தயாரிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | டிரவ் | 72’ | 8 | - | 5.5 விதரிங் மின்சுழற்சி | | இஷாரா என்ஜினியரிங் |
| 2 | டிரவ் | 76’ | 8 | - | 5.5 விதரிங் மின்சுழற்சி | | இஷாரா என்ஜினியரிங் |
| 3 | ரோலர் | 46.6’ | 2 | 32 | 20 | | வோக்கர்ஸ் |
| 4 | ரோலர் | 47’ | 3 | 32 | 20 | | காமினி என்ஜினியரிங் |
| 5 | ரோலர் | 40’ | 1 | 32 | 15 | | C.C.C. |
| 6 | ரோலர் | 44’ | 1 | 32 | 15 | | வோக்கர்ஸ் |
| 7 | ஸ்டேன்டிங் கெவி டியுடி டீ ரோலர் வித் என்லார்ஜ் வீட் ஹொப்பர் | | 2 | | | | வோக்கர்ஸ் தயாரிப்பு |
| 8 | ரோலர் பிரேக்கர் | 4x12’ | 4 | 365 | | | காமினி என்ஜினியரிங் |
| 9 | டிரையர் வித் பொய்லர் | 6’ | 2 | | | 350 kg | பார்கோ |
| 10 | டிரையர் வித் பொய்லர் | | | | | 225 kg | பிரவுன் |
| 11 | டிரையர் வித் பொய்லர் | | 1 | | | 50 kg | டேமெக்ஸ் லங்கா (பிரைவட்) லிமிட்டட் |

| இல. | இயந்திரங்கள்/ உபகரணங்கள் | பருமன் | அளவு | R.P.M. | M.H.P. | வரிசை | தயாரிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | வயர் வூட் மெசின் | | 2 | 1400 | 2 | 350 kg | இஷாரா என்ஜினியரிங் |
| 13 | 3 T மெசின் | | 1 | | | 350 kg | P.P.P. என்ஜினியரிங் |
| 14 | சுகின் விநோவர் | | 3 | 920 | 5 | 350 kg | இஷாரா என்ஜினியரிங் லக்கிபே என்ஜினியரிங் |
| 15 | ஸோடா சிவ்டர் வித் | | 3 | 250 | 2 | 220 kg | இஷாரா என்ஜினியரிங் லக்கிபே என்ஜினியரிங் |
| 16 | கலர் செப்பரேட்டர் | | 1 | | | 275 kg | 7500 சென்வெக் கொனிக்கா |
| 17 | கலர் செப்பரேட்டர் | | 1 | | | 375 kg | 8400 சென்வெக் கொனிக்கா |
| 18 | கலர் செப்பரேட்டர் | | 1 | | | 325 kg | டைமிங் லங்கா |
| 19 | மேசின் சிவ்டர்ஸ் | | 4 | 1390 | 1 | 350 kg | மில்ப்ஸன் என்ட் மின்ஷி |
| 20 | பகோ கட்டர் | | 1 | | | 400 kg | - |
| 21 | பகோ கட்டர் | | 3 | | 2 | 350 kg | - |
| 22 | ஜெனரேட்டர் | | 1 | | | KV350 | - |
| 23 | வயர் வெக் ஸ்பிலிட்டர் | | 1 | 1440 | | | |
| 24 | வயர் வூட் ஷிப்டர் | | 1 | 1440 | | | |
| 25 | ஹியுமிடிடி வயர் | | 3 | | | | |
| 26 | மிட்லஷன் | | 2 | | | 1390 | |
| 27 | டெரி நிப்பர் பிரேயர் | | 1 | | | | உள்ளூர் தயாரிப்பு |
| 28 | பெனல் போட் வித் இலக்ரிகல் இன்சுலேஷன்ஸ் | | 1 | | | | |

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், கங்க இஹல கோரளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மல்வத்தகம கிராம அலுவலர் பிரிவு குருந்துவத்த, பெல்லாப்பிட்டியவில் கல்பாய தேயிலை தொழிற்சாலை வளாகத்தில் அனைத்து மற்றும் ஏராளமான அசையாமலான இயந்திரங்கள் மற்றும் விவரிக்கப்பட்டுள்ள உபகரணங்கள் மற்றும் எல்லா அசையாச் சொத்துக்களும் வைக்கப்பட்டு சேமித்து வைக்கப்பட்டுள்ளன மற்றும் அத்தகைய மற்றைய கடைகளில் மற்றும் வளாகத்தில் இப்போதும் பாவனையில் அல்லது இது இருக்கலாம் அல்லது எந்த அசைக்கமுடியாத இயந்திரம் கார்கில்ஸ் வங்கி லிமிட்டெட் நிறுவனத்தின் கடன்பட்டதான கால்பாய தேயிலை நிறுவனம் அவ்வப்போது மட்டுமே சேமித்து வைத்திருக்க வேண்டும். அவ்வப்போது அல்லது எப்பொழுதும் இந்த பொருட்களை தொடர்ச்சியாக கொண்டு வரவேண்டும் அல்லது எந்தவொரு நேரத்திலும் எப்பொழுதும் காலதாமதமின்றி அதன் வியாபாரத்தை நீக்கவும் அதன் வணிகத்தை எடுத்துச் செல்வதும் அல்லது அதற்குரிய இடங்களில் அல்லது வணிகத்தின் வேறு எந்த இடத்திலும் அமையலாம்.

எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் 2022, யூன் 03ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

அம்மார் என்ட் பிரதர்ஸ் (பிரைவட்) லிமிட்டட்டிற்காக "கடன்பட்டோர்" என்ற வகையில் நொத்தரிரசு கே. எஸ். டி. டபிள்யூ. ஜெயவீர என்பவரினால் 2018.04.06 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட பின்னிணைப்பு முதன்மை அடைமானம் இல. 6398 பின்னிணைப்பு 2019.01.23 ஆந் திகதியிடப்பட்ட இல. 6482 (பின்னிணைப்பு முதன்மை அடைமானம் இல. 6398 க்கு உரியது) மற்றும் 2009.01.23 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இரண்டாவது அடைமானம் இல. 6483 கார்கில்ஸ் வங்கி லிமிட்டடில் (பதிவு இல. PB 4847)) வைப்பிலிடப்பட்ட கட்டணம் செலுத்தத் தவறிய சொத்து.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- கம்பளை நகரத்திலிருந்து தொலஸ்பாகே வீதி வழியாக குருந்துவத்த வீதி சந்தியை அடைந்து அங்கிருந்து இடதுபக்கமாக குருந்துவத்த வீதியால் திரும்பி 9 கி. மீ. தொலைவிலுள்ள குருந்துவத்த பஸார் வரை சென்று பின் இடதுபக்கமாக உள்ள பெல்பிட்டய வீதியால் திரும்பி 50 மீ. தூரம் உள்ள பொலிஸ் ஸ்டேசன் வரை சென்று முன் உள்ள தனியார் வீதியால் சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வீதியின் அருகில் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- தயவு செய்து 2019.05.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி, " திவயின", "டெய்லி மிரர்", மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் விதம்.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்துதல் வேண்டும்.

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்);
2. உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்);
3. ஏலவிற்பனையாளர் கட்டணமாக 2 1/2 % (இரண்டரை வீதம்) கொள்விலையிலும் வரி அறவீட்டிலும்;
4. விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் ஏனைய விற்பனைச் செலவுகள்;
5. இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 1,000.00;
6. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% அல்லது இலங்கை அரசினால் விதிக்கப்பட்ட வரிகள் மற்றைய செலவீனங்கள் விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதி தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

சம்பந்தப்பட்ட ஆவணங்களை தயவு செய்து தலைமை மீட்டலலுவலகம், கார்கில்ஸ் வங்கி லிமிட்டட்,இல. 696, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். (தொ. பே. 011-7640450).

"மேற்படி ஏலவிற்பனையை வங்கியினால் முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்"

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவை.
தொலைபேசி இல. 011-3068185, 2572940

05- 81